TAMIL MURASU, TUESDAY, 27 JULY 2021, PAGE 4

# தானியங்கி வாகனம் ஓட்டும் போட்டியில் பரிசுகளை அள்ளிய என்டியு குழு

அமெரிக்காவைச் சேர்ந்த தானியங்கி வாகனம் ஓட்டும் தொழில்நுட்ப நிறுவனமான 'வேமோ'வின் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டியில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் (என்டியு) இயந்திர மனிதவியல் குழு பரிசுகளை வென்றுள்ளது.

அடுத்த எட்டு வினாடிகளில் தானியங்கி வாகனம் எங்கு இருக்கும் என்பதை முன்னுரைக்கும் வழிமுறையை அக்குழு கண்டுபிடித்துள்ளது.

இதற்காக அக்குழுவுக்கு இரண்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்போட்டியில் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களிலிருந்து 70க்கும் மேற்பட்ட குழுக்கள் பங்கெடுத்தன.

அதுமட்டுமல்லாது, அமெரிக்காவில் உள்ள 'சிலிங்ஸ்' எனப்படும் செயற்கை நுண்ணறிவு நிறுவனமும் சீனாவைச் சேர்ந்த வாகன உற்பத்தி நிறுவனமான 'லீப்மோட்டாரும்' போட்டியில் பங்கெடுத்தன.

போட்டியை நடத்திய 'வேமோ' நிறுவனம் கூகலின் துணை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

உதவிப் பேராசிரியர் லியு சென், முனைவர் பட்டக் கல்வி மாணவர்கள் மோ சியாவ்யு மற்றும் ஹுவாங் சியு ஆகியோரைக் கொண்ட என்டியு குழு இருவழித் தொடர்பு முன்னுரைப்புப் பிரிவில் முதல் பரிசு வென்றது.



முதல் பரிசு வென்ற என்டியு குழு. படம்: என்டியு